# சின்ன வெங்காய விலை சீராக இருக்கும்

இந்தியாவின், 2014-15க்கான மொத்த சின்ன வெங்காய சாகுபடி பரப்பில் தமிழ்நாடு 70 சதவீத பங்களிப்புடன் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சின்ன வெங்காயம் அதிகளவு பயரிடப்படுகிறது. இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயம் மலேசியா, இந்தோனேசியா, இலங்கை மற்றும் மாலத்தீவுகள் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2014-15, பெரம்பலூர் (7948 எக்டர்), திருச்சி (3500 எக்டர்), திண்டுக்கல் (2990 எக்டர்), திருநெல்வேலி (1828 எக்டர்), திருப்பூர் (1036 எக்டர்), தூத்துகுடி (1300 எக்டர்), நாமக்கல் (1988 எக்டர்), விருதுநகர் (1242 எக்டர்) மற்றும் கோயமுத்தூர் (1131.5 எக்டர்) ஆகிய மாவட்டங்கள் சின்ன வெங்காயம் பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். இவை, தமிழகத்தின் மொத்த சின்ன வெங்காய சாகுபடி பரப்பில் 85 சதவீ த பங்கு வகிக்கின்றன.

தற்போது, அறுவடையான சின்ன வெங்காய வரத்து, தாராபுரம், பல்லடம், உடுமலை, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய பகுதிகளிலிருந்தும், இருப்பு வைக்கப்பட்ட சின்ன வெங்காய வரத்து நாமக்கல், திருச்சி மற்றும் ஒட்டன் சத்திரம் பகுதிகளிலிருந்தும் சந்தைக்கு வர துவங்கியுள்ளது. மைசூரிலிருந்து சின்ன வெங்காய வரத்து வரும் ஜுலை மாதம் முதல் துவங்கவுள்ளது. தற்போது தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை திண்டுக்கல் சந்தையில் ரூ.30 வரை விற்கப்படுகிறது. விதைப்பு சின்ன வெங்காயத்தின் தேவை அதிகரிப்பால், தற்போது விலை அதிகரித்துள்ளது. ஏற்றுமதி தேவை மற்றும் சின்ன வெங்காயம் பயிரிடும் மாவட்டங்களில் தென்மேற்கு பருவ மழையை பொறுத்து பண்ணை விலையில் மாற்றங்களை சந்திக்க நேரிடும்.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 17 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு

மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிகளின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் விலை ஆகஸ்டு – செப்டம்பர், 2015 மாதங்களில் கிலோவிற்கு ரூ.28 முதல் ரூ.30 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் சின்ன வெங்காய விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் கோ-5 இரகம், வட்ட வடிவம், இளஞ்சிவப்பு மற்றும் 27 மி மீ விட்டம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஏற்றுமதி தரம் வாய்ந்த இரமாகும்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003,
தொலைபேசி -0422-2431405


**<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003,
தொலைபேசி எண் - 0422-6611374, 0422-6611283